**செ.வெ. எண்: 770** **நாள்: 13.11.2017**

<u>செய்தி வெளியீடு</u>

**கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இன்று (13.11.2017) சபரிமலைக்கு வரும் பக்தர்களின் வசதி குறித்து நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் மாநாட்டில், முதலமைச்சர் சார்பில் கலந்து கொண்டு அமைச்சர் திரு. D. ஜெயக்குமார் அவர்கள் ஆற்றிய உரை.**

**எல்லாவர்க்கும் என்டே நமஸ்காரம் !**

2017–2018 ஆம் ஆண்டு மண்டல மகர கால சீசனை முன்னிட்டு கேரள மாநில முதலமைச்சர் தலைமையில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது. தென் மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள் உள்பட, துறை உயர் அலுவலர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் சார்பாக கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்னதானம், திருப்பணி மற்றும் குடமுழுக்கு, திருக்கோயில் புனரமைப்பு, கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணிகள், திருக்கோயில் நிலம் பாதுகாப்பு, தேரோட்டம், திருக்குளங்கள் சீரமைப்பு, சிறிய கோயில்களுக்குப் பூஜை உபகரணங்கள் என்ற பல்வேறு திட்டங்களால் தமிழகத் திருக்கோயில்கள் சிறப்பாக உள்ளன.

தமிழக இந்து சமய அறநிலையத்துறை தலைமையிடத்தில் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டுவரும் தகவல்மையத்தில் உள்ள இலவச தொலைபேசி இணைப்பில் தினந்தோறும் மிக அதிக அளவில் பக்தர்கள் தங்கள் தேவைகளை விசாரித்து அறிந்து கொள்கின்றனர். இதனால் இதன் பயன்பாடு குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இம்மையம் வெற்றிகரமாக செயல்படுவதையொட்டி ஏற்கெனவே சபரிமலை மற்றும் இதர மாவட்டங்களில் இயங்கி வருகிற 3 தகவல் மையங்களுடன் இவ்வாண்டு கூடுதலாக ஒரு தகவல் மையம் தேனியில் ஏற்படுத்தப்பட உள்ளது.

பொதுவாக தமிழ்மக்கள் சபரிமலையில் கேரளத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குட்பட்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல், இயல்பான சூழ்நிலையைப் பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள். நம் மாநிலத்திற்கு இது பெருமையான விஷயமாகும். இவ்வாண்டும் அவ்வாறே தமிழ்மக்கள் கேரள மாநிலக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, சபரிமலை தரிசனம் பெறுவார்கள் என்று முழுமையாக நம்புகிறேன். சபரிமலைக்கு வரும் பக்தர்களில் 40 சதவீதம் தமிழ்நாட்டிலிருந்து வருகின்றனர். அவர்களை ஒருங்கிணைக்கவும் அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவதற்குமாக தமிழகத்தை சேர்ந்த தமிழக அரசால் பரிந்துரைக்கப்படும் நபர் ஒருவரை திருவாங்கூர் தேவசம் போர்ட்டில் உறுப்பினராக சேர்ப்பதற்கு கருதுமாறு கேரள அரசை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கூறியவாறு தமிழ்நாட்டிலிருந்து பயணிக்கும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து விதமான அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுக்குமாய் கேரள அரசை கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஏற்கனவே தமிழ்நாடு அரசு கேரள அரசிடம் முன் வைத்துள்ள முக்கியமான கோரிக்கை ஒன்று நிலுவையில் உள்ளது. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு பக்தர்களின் வசதிகள் மேம்பாட்டிற்காக 5 ஏக்கர் நிலத்தை சபரிமலையில் ஒதுக்கீடு செய்து தருவதாக கேரள அரசு உறுதியளித்திருந்தது. இதையொட்டி தமிழ்நாட்டிலும் கேரளபக்தர்களின் வசதிக்காக பழநியில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு முன் வந்தது. கேரள மாநில சபரிமலையில் 5 ஏக்கர் நிலத்தை விரைவில் ஒதுக்கீடு செய்தால், சுவாமி ஐயப்பனின் பக்தர்களுக்குக் கூடுதலாக மேம்படுத்தப்பட்ட வசதிகள் தமிழ்நாடு அரசால் செய்யப்படும். ஆகையால் இவ்விஷயத்தில் விரைவில் முடிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எதிர்வரும் மகரஜோதி, அனைத்து மாநிலமக்களுக்கும் சபரிமலை ஐயப்பனின் திருவருள் கிடைத்திடவும், யாத்ரீகர்களின் பிரார்த்தனை மற்றும் கோரிக்கைகள் நிறைவேறவும் துணை நிற்கும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**